# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

TAMIL NADU LEGISLATIVE ... LIBRARY
4-DEC1979
MADRAS

---

## திங்கட்கிழமை, 1979 மார்ச் 12.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) *வினாக்கள்—விடைகள்.*

உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோவை மாவட்டத்திற்கு பாண்டியாறு–புன்னம்புழா நீர்

*குறுகிய கால வினா எண். 11—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு – புன்னம்புழா ஆற்றின் தண்ணீர் கோவை, அவினாசி, பல்லடம் தாலுகாக்களில் பயன்படுத்துவது குறித்து கேரள அரசின் சம்மதம் கிடைத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் நிறைவேற எத்தனை கோடி ரூபாய் செலவாகும் ?

(இ) எத்தனை லட்சம் ஏக்கர் அதனால் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) தமிழக அமைச்சர்கள் 19, 20-12-78 தேதிகளில் கேரள முதல்வருடன் திருவனந்தபுரத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மீண்டும் இது குறித்து பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது.

(ஆ) & (இ) : இவ் வினாக்களுக்கு **இடமில்லை.**

### சஞ்சய் காந்தி வருகையின்போது ஏற்பட்ட செலவு

*** வினா எண். 358**—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சென்னை நகரில் ஏற்பட்ட பெரும் வெள்ளச் சேதத்தை பார்வையிட வந்திருந்த சஞ்சய் காந்திக்காக மாநில அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

[1979 மார்ச் 12

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சென்னை நகரில் ஏற்பட்ட பெரும் வெள்ளச்சேதத்தை பார்வையிட வந்திருந்த திரு. சஞ்சய் காந்திக்காக ராஜ்பவனத்தில் தங்கியபோது கவர்னர் மாளிகை செலவில் அவருக்களித்த உணவும், தேனீர்ச் செலவும் ஆக ரூ. 11·55 தவிர மாநில அரசு செலவு எதுவும் செய்யவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திரு. சஞ்சய் காந்தி தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு சார்பில், அதன் பிரதிநிதியாக அனுப்பப்பட்டு வந்தாரா, அல்லது சொந்த முறையில் வந்தாரா என்பதையும், நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற அடிப்படையில் தொடர்ந்து இன்னொரு கேள்வியையும் கேட்க விரும்புகிறேன். சென்னை நகரத்தில் வெள்ளச்சேதப் பகுதிகளை பார்வையிடச் சென்றபோது எந்தெந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டன, அவருடன் சென்றவர்கள் யார் யார் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? திரு. சஞ்சய் காந்தியோடு அரசுத் தரப்பில் யார் சென்றார்கள் என்பதையும், வெள்ளச்சேதப் பகுதிகளை பார்வையிடுவதற்காக அரசு செலவழித்த தொகை எவ்வளவு, அதைத் திரும்பப் பெற அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் என்ன என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, திரு. சஞ்சய் காந்தி தனியாக வந்து பார்வையிட்டு இருந்தால் அவற்றைச் சொல்ல முடியும். அவர் மத்திய அமைச்சர்களாக இருந்த திரு. ஓம் மேத்தா, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களோடு வருகை தந்து இங்கே பார்வை இட்டார்கள். அவர்களோடு வருகை தந்து பார்வையிட்ட காரணத்தால் அவர் மேற்கொண்ட பயணங்கள், அதற்கான செலவுகள் எல்லாம் அரசாங்கப் பயணம் என்பதையும், அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்யும்போது கட்சிக்காரர்கள் வருவது இயல்புதான் என்பதையும் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சாதாரணமாக அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்கிறபோது அவர்களைச் சேர்ந்த சில நண்பர்கள் சுற்றுப்பயணம் செய்வது இயற்கை என்றாலும், திரு. சஞ்சய் காந்தியைப் பற்றி அப்படி கருதிடும் நிலையில்லை. ஒரு பிரதம அமைச்சரின் குமாரராக இருந்துகொண்டு அவர் அத்துமீறிய காரியங்களில் செயல்பட்டு இருக்கிறார் என்று இந்தியா முழுமையிலும் நிலைமைகள் ஏற்பட்டு இருக்கும் நேரத்தில், தமிழ்நாட்டில் அதற்கென ஒரு சான்று கிடைத்து இருக்கும்போது, இந்த அரசும் இப்படி அதிகார

1979 மார்ச் 12]

துஷ்பிரயோகத்தை அவர் தமிழ் நாட்டில் செய்து இருக்கிறார் என்று சொல்லி தன்னுடைய கண்டனத்தைத் தெரிவிக்க அல்லது வேறு முறைகளில் தவறைச் சுட்டிக்காட்ட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதிலே தமிழக அரசு கண்டிப்பதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை.. சுற்றுப்பயணம் செய்த மத்திய அமைச்சர்களோடு திரு. சஞ்சய் காந்தி அவர்கள் வந்து இருக்கிறார். ஆகவே, மத்திய அமைசசர்கள் இங்கே சுற்றுப்பயணம் செய்கிறபோது அவர்களுடைய செலவை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்தைச் சார்ந்தது. திரு. சஞ்சய் காந்தி வேறு சில இடங்களில் சுற்றுப்பயணம் செய்ததுபோல் அல்ல தமிழ் நாட்டிற்கு வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்..

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்கள் வருகிறபோது அவர்களுடன் கட்சிக்காரர்கள் வருவது இயல்பு. ஆனால் என்னைப் போன்றவர்கள அறிந்து வைத்து இருப்பது திரு. சஞ்சய் காந்தி வந்த காரணத்தால் அவருக்கு வெள்ளப்பகுதிகளைச் சுற்றிப்பார்க்க அரசாங்கம் செலவழித்து இருக்கிறது என்பதையெல்லாம் எங்களுக்குத் தெரிந்தவிதத்தில் தெரிந்து வைத்து இருக்கிறோம். அதற்காக ஹெலிகாப்டர்கூட அரசாங்க செலவில் பயன்படுத்தப்பட்டது என்றும் கூறப்பட்டது. அதை எல்லாம் நடைமுறைப்படுத்திய அரசு இன்றைய அரசு இல்லையென்றாலும், பதில் சொல்ல வேண்டிய இடத்தில் வீற்றிருக்கும் அமைச்சர் அவர்கள் அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை தமிழ் நாடு அரசின் மூலமாக செலவழிக்கப்பட்டு இருந்தால், அதை மீண்டும் திரும்பப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தச் செலவு தமிழக அரசால் மேற்கொள்ளப்படவில்லை. ஆளுநருடைய மாளிகையில் அவர் தங்கியிருந்தார். செலவும் ஆளுநருடைய செலவாக அதாவது ஆளுநருடை 'ஹவுஸ்ஹோல்டு எக்ஸ்பென்ஸ்' என்பதில் அது அடங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, செலவழித்த தொகையைப் பற்றியது. வேறு கேள்விகளைக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இது பாலிசி மாட்டராக இருக்கிறது. இதில் பல கேள்விகள் இருக்கின்றன,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கொள்கைப் பிரச்சனைகள் எல்லாம் கிடையாது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, முக்கியமான கேள்வியாக............(குறுக்கீடு) நீங்கள் சஞ்சய் காந்தியை ஆதரித்தால் உங்கள் கட்சியே 'குளோஸ்' ஆகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தமாதிரி விவாதத்தையெல்லாம் வெளியிலே வைத்துக்கொள்ளுங்கள். இது அவை. தயவுசெய்து உட்காருங்கள்.

ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்.

*வினா எண். 359—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களில் யாரேனும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக உள்ளனரா—

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஒருவருமில்லை.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, தமிழை பாடமொழியாகக் கொண்டுபடித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக யாரும் வரவில்லை என்று சொன்னார்கள். அப்படியானால் தமிழை பாடமொழியாகக் கொண்டு கற்பவர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரி யாவதற்கு அருகதை உண்டா, இல்லையா —

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதுவரை ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வந்திருக்கிறவர்கள் எல்லாம் கல்லூரிகளிலே ஆங்கிலத்தை பாடமொழியாக ஏற்று படித்தவர்களாக இருக்கிறார்கள். தமிழை இப்போதுதான் கல்லூரிகளில் பாடமொழியாக ஆக்கியிருக்கிறோம். ஒருவேளை எதிர்காலத்தில் தமிழை பாடமொழியாகக் கொண்டு படித்தவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வரலாம்.

*Electricity undertakings taken over by Government.*

*Q. No. 338—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the firms dealing in power distribution in the private sector have been paid due compensation by the State for taking over; and

(*b*) if not, the causes for the delay in payment ?